# கண்ணீர் விட்டே வளர்த்தோம்

கரும்பறவை



**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் போது, தென் தமிழீழப் பகுதிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகையில் சந்தித்த சம்பவங்கள், எதிர் கொண்ட நடவடிக்கைகள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன இங்கு நினைவு கூரப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த வேளையில் உணர்வுபூர்வமிக்கதான எங்களுடைய போராட்டத்தை விளக்குகின்றது இக்கட்டுரை.**

எப்படியோ மட்டக்களப்புக்குக் கொண்டு செல்வதற்கு ஆயுதம் கிடைத்து விட்டது. இரண்டு .45 ரக சுழல் துப்பாக்கிகள் மட்டக் களப்புக்கு என ஒதுக்கப்பட்டு விட்டன. எங்கள் முகத்தில் பூரிப்பு. இதைக் கொண்டு செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து பிரான்ஸிஸ் யாழ்ப்பாணம் வந்திருந்தான்.

தற்போது புலிகளின் ஆதரவாளர்களாக இருப்போரை 'தடா' சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுவதாக மிரட்டிக் கொண்டிருக்கும் இந்திய அரசிடம் அப்போது (1983 இல்) பயிற்சி பெற்ற டேவிட் ! பயிற்சி முடித்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தான். இந்த இருவருடன் நானும் மட்டக்களப்புக்கு புறப்பட ஆயத்தமாயினேன். கூடியவரை மிதிவண்டியிலேயே செல்வது என்பது எமது திட்டம். மிதிவண்டியில் ஆகக் கூடியளவு மதவாச்சி வரைச் செல்ல முடியும். அதற்கப்பால் தொடர்ச்சியாக மிதிவண்டி ஓட்டுவது கடினம்; இடையில் தங்குவது என்பதும் முடியாத காரியம். மதவாச்சிவரை காட்டுப்பாதைகளுக்கூடாகச் செல்வது எப்படி? இதற்கு தான் உதவுவதாக அப்போது போராளியாக இருந்த தவம் அண்ணை உறுதியளித்தார். "அவ்வளவும் போதும் அதுக்கு மேல் நாங்கள் பாத்துக் கொள்ளுவோம்" என்று கூறினோம்.

இரு மிதிவண்டிகளில் எமது பிரயாணம் ஆரம்பமாகியது. நானும் டேவிட்டும் ஒரு மிதிவண்டியில் மற்றையதில் தவம் அண்ணையும், பிரான்ஸிசும். இன்று கொழும்புப் பாதையாகி விட்ட கொம்படிப் பாதை அந்தக் காலத்தில் ஆள் நடமாட்டமில்லாத இடம். இதனூடாகச் செல்லும் ஒவ்வொரு தடவையும் முள்ளுக் குத்தி மிதிவண்டிக்குக் காற்றுப் போய்விடும். அப்படியானால் இடையில் உதவியே

'கிடைக்க வாய்ப்பில்லை. இதைக் கூட வந்தவர்களுக்குச் சொன்னேன். மிக அவதானமாகப் போனதால் மிதிவண்டிக்குக் காற்றுப் போகாத முதல் பயணமாக அது அமைந்தது. நாம் கிளிநொச்சியைச் சென்றடைந்தோம். அங்கு எமக்குத் தெரிந்த ஒரு இடத்தில் தங்கியிருந்தோம்.

பரந்தனில் சிவதாசன் என்ற துரோகிக்கு மரண தண்டனை வழங்குவதென்று ஏற்கனவே தீர்மானித்திருந்தோம். கிளிநொச்சிக்கு வந்த இடத்தில் அதனை நிறைவேற்றாமல் போனால், பின்னர் இப்பகுதிக்கு ஆயுதம் கொண்டு வரும்போது தான் நிறைவேற்ற முடியும். பெரும்பாலும் பரந்தன் சந்தியில் தான் சிவதாசன் நிற்பான். அப்பகுதியில் இராணுவ ரோந்து அடிக்கடி நிகழும். ஆனாலும், அதற்காக இதனைத் தள்ளிப் போட முடியாது. ஆகவே ஒரு தடவை இராணுவம் ரோந்து வந்து சென்றதும் உடனடியாக இதனை நிறைவேற்றுவதெனத் தீர்மானித்தோம். ஏனெனில், அடுத்த ரோந்துக்கு சிறிது நேரம் செல்லும். ஆனால் தண்டனையை நிறைவேற்ற போன அன்று நாம் எதிர்பார்த்த நேரத்திற்கு இராணுவம் வரவில்லை. இந்தத் துரோகிக்காக எமது பயணத்தை ஒத்திப் போடவும் முடியாது. எனவே, இப்போதே நிறைவேற்றுவோம் எனத் தீர்மானித்து அப்படியே செய்தோம்.

தண்டனையை நிறைவேற்றி விட்டு 150 யார் கூடச் சென்றிருக்க மாட்டோம். அதற்குள் இராணுவம் வந்து விட்டது. பரந்தன் சந்தியில் நின்ற எவருமே எம்மைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஆதலால் தப்பினோம்.

உடனடியாக இடத்தை மாற்றி வேறு இடத்தில் நிற்பதற்குரிய ஒழுங்குகளை அப்போதைய கிளிநொச்சிப் பிரதேசப் பொறுப்பாளராக விளங்கிய மாறன் செய்திருந்தார்.



"நான் அம்மாவை வீட்டில மட்டுமில்ல, எங்கேயும் சந்திக்க விரும்பவில்லை. நான் போராட்டத்தில இறங்கினதுக்குப் பிறகு அம்மா என்னை ஒரு கைதியாகத்தான் சந்திச்சிருக்கிறா -ஒரு வீரனாய்ப் பார்க்கயில்லை! அதால நான் இனி ஒரு பீ(F)ல்ட் செய்து அதில எடுத்த ஆயுதத்தைக் கொண்டு போய்த்தான் அம்மாவுக்கு முன்னால நிக்க வேணும்."

- பரமதேவா

அடுத்த நாள் எமது காட்டு வழிப் பயணம் ஆரம்பமானது. இடையில் ஒரு மிதிவண்டிக்குக் காற்றுப் போய் விட்டதால் நீண்ட நேர நடை-ஒருவாறு வவுனியா மாவட்டத்திற்குள் போய் விட்டோம். இதே வேளை யாழ்ப்பாணத்தில் அலன் தம்பதிகளைக் கடத்தியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் வேண்டுகோளின் (கட்டளையின்) பிரகாரம் அவர்களை அன்றைய தினம் விடுதலை செய்வதாகக் கூறியிருந்தது. ஆகவே அன்று வட பகுதியெங்கும் இராணுவம் தனது ரோந்தைத் தீவிரமாக்கியிருந்தது.

ஓமந்தையில் இருந்த அகதிகள் முகாமருகே நாம் சென்றபோது, இரு இராணுவ வண்டிகள் வேகமாக எம்மைத் தாண்டிச் சென்றன. அதன் பின் எமது கோலத்தில் சற்று மாறுதல்கள் செய்தோம். அப்பாவிக் கிராம வாசி போல் தலைப்பாகை கட்டியிருந்தார் தவம் அண்ணை. சற்றுத் தூரம் சென்றதும் ஊர்ந்தபடியே இரு இராணுவ வண்டிகள் வந்தன. எமது இரு மிதிவண்டிகளுக்குமிடையில் அதிக தூர இடைவெளியிருந்தது. ஒவ்வொருவர் முகத்தையும் நன்றாக அவதானித்தனர் இராணுவத்தினர். யாராவது திருட்டு முழி முழித்திருந்தால் எமக்குச் சிக்கல் வந்திருக்கலாம். அதிஸ்ட வசமாக அப்படியேதும் நிகழவில்லை. நாம் பண்டாரிகுளத்தைச் சென்றடைந்தோம்.

அங்கு எமது வேட்டு யாத்திரையின் அடுத்த கட்டம் பற்றித் தீர்மானித்தோம். புளொட் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்த 'தர்மே' என்ற சிங்களவனுக்கு மரண தண்டனை வழங்குவதென்று முடிவாயிற்று. அக்கால கட்டத்தில் வவுனியாவில் 'புளொட்' இயக்கமே எங்கும் நிறைந்திருந்தது. ஒரு சமயம் அவர்கள் வவுனியாவில் சிறிலங்கா விமானப் படையினர் மீது தாக்குதல் நடாத்தினார்கள். சிறலங்காப் படையினரின் எதிர்த் தாக்குதல் தொடங்கியதும் தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவர்கள் பயத்தினால் ஓடி விட்டார்கள். ஓடும் போது ஒரு எஸ்.எம்.ஜீயை அருகில் இருந்த ஒரு கடையின் மிளகாய்ச் சாக்கிற்குள் வைத்து விட்டார்கள்.

இத்தாக்குதலின் போது இராமநாதன் என்ற 'புளொட்' உறுப்பினர் காயமடைந்திருந்தார். அவரைக் கூட கூட்டிக் கொண்டு போகவில்லை. அவரைவிட, இன்னொரு உறுப்பினரையும்கூட விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். எனவே அவர் இராமநாதனை மிதிவண்டியில் ஏற்றிக் கொண்டு காந்தீயம் பண்ணைக்குள் சென்றார். இவர்கள் இருவரையும் பின் தொடர்ந்தபடி வந்துகொண்டிருந்தான் தர்மே என்ற சிங்களவன்.

அவன் ஒரு வாடகைக் கார்ச் சாரதி. எல்லாவற்றையும் அவதானித்த அவன் சிறிலங்காக் காவல்த் துறையினருக்குத் தகவல் கொடுத்தான். அவர்கள் அந்த இடத்திற்கு விரைந்தனர். உடனே மோதல் நடந்தது. இவர்களிடம் ஒரேயொரு கைத்துப்பாக்கிதான் இருந்தது. காப்பாற்றி வந்தவர் கொல்லப்பட்டார். காயமடைந்தவர் கைது செய்யப்பட்டார். அந்தக் காலத்தில் 'போராளிகளே தற்கொலை செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை' என புளொட் கூறியிருந்தது. பிற்காலத்தில் இது பற்றி சுவரொட்டியும் ஒட்டியிருந்தது. அதனாற்றான் இராமநாதன் கைதாக நேர்ந்தது. இதனால், வவுனியாவில் புளொட்டின் நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பலர் கைதாகினர்.

இந்தச் சம்பவத்தில் காட்டிக் கொடுத்த தர்மேக்கு தண்டனை வழங்குவதானால் மீண்டும் வவுனியா நகருக்குள் செல்ல வேண்டும். அந்த விசப்பரீட்சைக்கு புளொட் தயாராகவிருக்கவில்லை. எனவே, அதை நாம் செய்யத் தீர்மானித்தோம். இதற்காகத் திட்டம் தீட்டினோம்.

வவுனியா நகருக்குள் செல்லும் ஒருவர் தர்மேயின் மோட்டார் வண்டியை வாடகைக்கு அமர்த்தி வருவதென்று முடிவாயிற்று. ஏற்கனவே அங்கு தங்கியிருந்த இரகுமான் இதற்கு முன் வந்தான். (இரணை இலுப்பங் குளத்தைச் சேர்ந்த இவன் பின்னர் சிறிலங்கா காவல்த்துறையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்தினான்)

ஒரு நாள் பிற்பகலில் இரகுமான் நகருக்குள் சென்றான். இரகுமான் புறப்படும் சமயம் "நேர தர்மேயிடம் போய்க் கேட்காத, இரண்டு மூன்று கார்க்காரரிட்டை றேட்டைக் கதைச்சு, பிறகு அது கட்டாது எண்டதால் தர்மேயிட்ட போற மாதிரி நடி; கார் பிடிக்கப் போகேக்கை நிறைய மரக்கறியும் வாங்கு" என்று கூறியிருந்தோம். அதன் படி இரகுமான் வேறொரு வாடகை மோட்டார் வண்டிக்காரனிடம் போய் விசாரித்தான். பின்னர் தர்மேயிடம் போய்க் கேட்டான். மற்றவரிடம் விசாரித்ததை தர்மே பார்த்துக் கொண்டுதான் நின்றான்-பின்னர் இரகுமான் அவனை அணுகி விசாரித்த போது அவன்,

"நான் இப்பத்தான் நெளுக்குளத்துக்குப் போட்டு வாறன். எனக்கு களைப்பாய் இருக்கு; நீ அதிலேயே போ" என்று அந்த மோட்டார் வண்டியின் கதவைத் திறந்து விட்டான். இரகுமானுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பூசனிக்காய் வேண்ட வேணும். வேண்டிக் கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு வந்து விட்டான்.

இரகுமான் முதல்நாள் போன விசயம் பிழைத்து விட்டது. அன்று மோட்டார் வண்டியில் போகாததால் அடுத்த நாள் மறுபடியும் தர்மேயிடம் எப்படிப் போவது? எனவே, வேறொருவரை அனுப்பத் தீர்மானித்தோம். தவம் அண்ணையின் நெருங்கிய உறவினன் ஒருவன் இதற்குச் சம்மதித்தான். பட்டாணிச்சூர் என்னுமிடத்திற்கு தர்மேயைக் கூட்டிக் கொண்டு வருவதாக முடிவாயிற்று. "ரி.வி. ஏத்த வேணும் எண்டு சொல்லு. எப்படியும் கொண்டு வா -இல்லாட்டிப் பிறகு இதைச் செய்யேலாமல் போகும்!" என்று சொல்லியிருந்தோம். அதன்படி அவன் தர்மேயைக் கூட்டிக் கொண்டு பட்டாணிச்சூருக்கு வந்தான்.

தர்மே கட்டுமஸ்தான தேகமுடையவன். மோட்டார் வண்டியை நிறுத்தியதும் இறங்கி வந்து தொலைக்காட்சியை ஏற்றுவதற்கு வசதியாக பின் 'டிக்கி'யைத் திறந்தான். தொலைக்காட்சிப் பெட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவன் விழிகள் சுழல் துப்பாக்கியைக் கண்டதும் ஆச்சரியத்தால் அப்படியே நின்றன. விசயம் முடிந்தது. ஆனால், அவனது மோட்டார் வண்டியைக் கொண்டு போக முடியாது. ஏனென்றால், எம்மில் எவருக்குமே வாகனம் ஓட்டத் தெரியாது. அதனால் அனைவருமே மிதிவண்டியில்தான் தப்பிப் போக வேண்டியிருந்தது. நாம் தொடர்ந்தும் பயணம் போக வேண்டியவர்கள் என்பதால், நாம் தங்கியிருக்கும் இடம் தமது உறவினனுக்குக் கூடத்தெரியக் கூடாது என தவம் அண்ணை விரும்பினார். அதனால், வீதி வழியாக அவனை அனுப்பி விட்டு எம்மை வரம்புகள் ஒற்றையடிப் பாதைகளூடாகக் கூட்டிக் கொண்டு போனார். களைத்துப் போய் நாம் ஒரு வீட்டிற்குள் சென்றோம். ஆனால், சிரமமில்லாமல் வீதி வழியாக முன்னே வந்து அவன் அங்கே கட்டிலில் இருந்தான்.

"பார்! நாங்கள் இவனுக்குத் தெரியக் கூடாதென்று இவ்வளவு கஸ்டப்பட்டு வர இவன் சுகமாக றோட்டால இஞ்சை வந்திருக்கின்றான்" என்று நம்மிடம் கிசுகிசுத்தார் தவம் அண்ணை.

எரிச்சலுடன் அங்கிருந்து பயணமானோம்; திரும்பவும் வரம்புகள், ஒற்றயடிப் பாதைகள்- அடுத்த இடத்திலும் இதே நிலைதான். அவனும்தான் என்ன செய்வது? நாங்கள் ஒவ்வொரு இடத்திலிருந்தும் செல்லச் செல்ல, இந்த இடம் பாதுகாப்பாக இல்லையாக்கும் என நினைத்து அவனும் அங்கிருந்து செல்வான். அவன் அந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதால் அவனும் தான் தப்ப வேண்டும் என நினைப்பது இயல்பாயிற்று. கடைசியில் பாவற்குளத்துடன் எமது வார் ஓட்டம் நின்றது.

தொடர்ச்சி 12ம் பக்கம் ....